தொழிலாளர் குடியிருப்புகளைத் தொழிலாளர்களுக்கு உரிமையாக்குதல்.

* 9027 திரு. ஆர். என். ஸ்ரீதர் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள தொழிலாளர் குடியிருப்புகளைத் தொழிலாளர்களுக்கு உரிமையாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரசு மானியத்துடன் நிறைவேற்றப்பட்ட தொழிலாளர் வீட்டுவசதி சட்டத்தின்படி பொதுத் துறையின்கீழ் கட்டப்பட்ட குடியிருப்புகளைத் தொழிலாளர்களுக்கு உரிமையாக்குவது குறித்து அரசு ஏற்கனவே சில ஆணைகள் பிறப்பித்துள்ளது. அவ்வாணைகளில் தற்போது பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கும், இறந்த தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கும், மற்றும் தற்போது தொழிலாளிகளாகவோ அல்லது குறைந்த வருமானத்துடன் சுயவேலைத் திட்டத்தின் கீழ் பணிபுரிபவர்களாகவோ இருப்பவர்கட்கும், அவர்கள் தொழிலாளர் குறிடியிருப்புகளில் வசித்து வந்தால் அவற்றை உரிமையாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி வீடுகளை உரிமையாக்குவதற்கு அவர்களிடம் பெறவேண்டிய தொகை குறித்தும் மற்றும் இதுகுறித்து பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. ஆர். என். ஸ்ரீதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற தேர்தலின்போது கிண்டி திரு. வி. க. தொழில் பேட்டையிலுள்ள தொழிலாளர்கள் குடியிருப்புகளை அவர்களுக்கு உரிமையாக்கித் தருவதாக வாக்குறுதி தந்து தொடர்புடைய மாண்புமிகு சமூகநல ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களை அழைத்து சென்று விழா ஏற்பாடு செய்து, கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் அன்று. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவைக் கேளுங்கள்.

திரு. ஆர். என். ஸ்ரீதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமுயற்சி எடுத்து அமைச்சரவைக் கூட்டத்தில் உரிய அரசாணை வழங்கப்பட்டும் இன்று வரை நிறைவேற்றப் படவில்லை என்பதும் அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நிறைவேற்றப்படுகின்ற வகையிலே அரசாங்கம் பரிசீலனை செய்து சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் திரு.வி.க. நகரில் 544 வீடுகளும் சர்மா நகரில் 450 வீடுகளும், அதிலே குடியிருப்பவர்களுக்கே சொந்தம் ஆக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கின்றது. அதேபோல தமிழகம் முழுவதும் மதுரை, ராஜபாளையம், சத்தியமூர்த்தி நகர், புதுக்கோட்டை, கோயம்புத்தூர் திருப்பூர், சிங்காநல்லூர், பீளமேடு ஆகிய எல்லா இடங்களிலும் சேர்ந்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் 2930 வீடுகள், சிட்கோ நிறுவனத்தின் சார்பில் 1187 வீடுகளும் கட்டப்பட்ட வீடுகள் அனைத்தும் அதிலே குடியிருப்பவர்களுக்கே விலைக்கு கொடுப்பது என்று அரசு முடிவு செய்து ஏற்கனவே அரசு ஆணைப்பிறப்பித்துள்ளது. அந்த அடிப்படையிலே அவர்களுக்கு வழங்கப்படும்.

9.35 மணி

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்புகளில் தற்போது யார் எல்லாம் குடியிருக்கிறார்களோ அவர்களுக்கே அவற்றை உரிமையாக்க வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை நிறைவேற்றியதற்காக நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில். இதையே காரனம் காட்டி அங்கேயிருக்கிற அதிகாரிகள் பொது மக்களுக்கு சேரவேண்டிய சாதாரண அடிப்படை வசதிகளான தண்ணீர் வசதி, சாலை வசதி போன்ற காரியங்களைக் கூட செய்து தருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு அத்தகைய புகார்கள் ஏதும் வரவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த புகார்களின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கன்குளம் பஞ்சாயத்தில் வாரச்சந்தை அமைத்தல்.

* 1902 திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வடக்கன்குளம் பஞ்சாயத்தில் வாரச்சந்தை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் ஆய்வில் இல்லை. ஆனால், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வடக்கன் குளம் ஊராட்சி